14
1-57

சகாதேவர் அருளிய

தொடுகுறிசாஸ்திரம்

111	112	113	114	121	122	123	124
131	132	133	134	141	142	143	144
211	212	213	214	221	222	223	224
231	232	233	234	241	242	243	244
311	312	313	314	321	322	323	324
331	332	333	334	341	342	343	344
411	412	413	414	421	422	423	424
431	432	433	434	441	442	443	444

கிடைக்குமிடம்:—
சரஸ்வதி புத்தகசாலை,
நெ. 175, செட்டியார் தெரு,
கொழும்பு.
மதராஸ்.

Copy Right.

விலை அணா 4

A: 864
N57
18194

புத்தக விளம்பரங்கள்

சரஸ்வதி புஸ்தகசாலை,

175. செட்டியார் தெரு, கொழும்பு.

	ரூ.	அ.	ப.
கந்தபுராணவசனம் ரப்பு 50 - திருவுருவ ஐதீகப் படங்களுடன்	12	0	0
இராமாயணவசனம் ரப்பு ஐதீக திருவுருவப்படங்களுடன்	12	0	0
ஷை கிளேஸ்	15	0	0
பெரியபுராணவசனம் ரப்பு படங்களுடன்	6	0	0
விராடபர்வம் கிளேஸ் படங்களுடன்	5	0	0
ஜோதிடப் பிரஞ்ஞான தீபிகை	4	0	0
சினேந்திரமாலை	2	0	0
கைத்தொழில் சாஸ்திரம்	1	0	0
தனிப்பாடல் மூலம்	1	8	0
வன்னியபுராணம்	4	0	0
விக்கிரமாதித்தன் கதை கிளேஸ் படங்களுடன்	5	0	0
அயோத்தியாகாண்டம் உரை	6	0	0
நாலாயிர திவ்யபிரபந்தம் ஆழ்வார்கள் படங்களுடன்	10	0	0
ஷை வடகலை	10	0	0
பெரிய வாணாசுரநாடகம்	4	0	0
கம்பராமாயணச் செய்யுள் 2-வால்யம்	15	0	0
வீமேசுரஉள்ளமுடையான்	2	0	0
ரோமரிஷி வினாடி பஞ்ச பட்சி விருத்தியுரை 352-பக்கங்கள்	4	0	0
திருவாய்மொழி	3	0	0
மீனாட்சி கல்யாணம்	1	8	0
மணிமந்திர வைத்திய சேகரம்	2	0	0
மலையாள மாந்திரிக ரத்தினாகரம்	2	0	0
புலிப்பாணி சோதிடம் தாய்மகள் ஏசல்	1	8	0

	ரூ.	அ.	ப.
கணித முருகசேகரம்	2	0	0
திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் மேற்படி உரையைக் கொண்டு இயற்றிய பதவுரை விசேட உரையுடன் இலக்கண குறிப்பும் சேர்ந்தது ரப்பு காகிதம்	10	0	0
ஷை கிளேஸ் காகிதம்	12	0	0
யூனானி பதார்த்தகுண சிந்தாமணி	3	0	0
வாசுதேவ மனனம்	3	0	0
திருப்போரூர் சன்னதி முறை கிளேஸ்	2	0	0
ஷை ரப்பு	1	8	0
திருவாசகம் மூலம்	1	8	0
குசேலபாக்கியானம்	2	0	0
கைவல்யம்உரை (கிளேஸ்)	2	0	0
ஷை (ரப்பு)	1	8	0
விநாயகர்கொத்து (ரப்பு)	3	0	0
சிவ விஷ்ணுக்ஷேத்திர விளக்கம்	3	0	0
பெண்கள் செய்குறி என்னும் சந்தன நூல்	0	6	0
நளவெண்பா உரை	3	0	0
ஸ்ரீவிஷ்ணுபுராண வசனம்	5	0	0
ஸ்ரீ மஹா பக்தவிஜயம் 1-ம்பாகம் 6-தாசர்கள் அடங்கியது	5	0	0
ஷை 2-ம் பாகம் 20-தாசர்கள் அடங்கியது	5	0	0
சங்கீத சுரபூஷணி 1-2-பாகங்கள்	2	0	0
18-சித்தர் வைத்திய சில்லரைக்கோர்வை	5	0	0
பலபாட்டு 200-சில்லரைக் கோர்வை	5	0	0
சூடாமணி நிகண்டு 12-தொகுதி	4	0	0

உ

ஸ்ரீ கிருஷ்ண சகாயம்

தொடுகுறி சாஸ்திரத்தின் நூன்முகம்

விருத்தம்

பூலோக மானிடர்கள் பிழைக்கவேண்டி பொய்யுரையாப் பாண்டவருக் கிளையதம்பி, சாலோக சாஸ்திரமுந் தெரிந்தஞானி சாஸ்திரத்தின் கொடியுடைய சகாதேவன்காண், காலகா லத்தி னுட நிலைமைகாண, கார்மேக வண்ணனது கருணைகொண்டு, மேலான தொடுகுறியை மொழிந்ததாலே மேதினியி லேகாம்பரம் வெளியிட்டானே. 1

சாமியென்று னுள்ளன்பு யிருக்கவேணும் சக்கரவர்த்தியானு னும் பக்திவேணும், காமிகளாய்த் திரிபவர்க்கு வெட்கமில்லை கைகண்ட தொடுகுறியோ கடப்பதில்லை, பூமியிலே யிந்நூல்தான் வெளிவந்தாலும் புத்தியில்லா மூடருக்குப் புலப்படாது, சுவாமி யுட மூத்தவனு ரருளினாலே சாற்றினேன் சகாதேவன் வாக்கைப் பாரே. 2

பாரப்பா வாக்குநிலை கண்டபோதும் பந்தயமாய்ச் சூதாடும் வேளைப்போதும், தூரப்பா துகிலதனைக் களையும்போதும துணை யிழந்து வனவாசம் போகும்போதும், சீரப்பா விராடனிடம் சேரும்போதும் சிற்றமராம் மாடுபிடி சண்டைபோதும், ஆரப்பா கார்மேகன் காப்பானென்று அருகிருந்து கொன்னதொடு குறியி தரமே. 3

தொடுகுறியின் சாஸ்திரத்தின் துணையினாலே தொல்லுல கைப் பறிகொடுத்தேது மஞ்சவில்லை, வடிவான தொடுகுறியின் வலுவினாலே வனவாசம சென்றவரும் வாடவில்லை, படியின்மிசை சகாதேவ னெழுதிவைத்த பாங்கான கணிதவகை தொண்ணூற் றுறில், அடைவான தொடுகுறியே போதுமென்று அன்புடனே நாதாக்க ளடுத்திட்டாரே. 4

நாதாக்க ளடுத்தமொழி பொய்யாகாது நம்பாத மடையருக்கு மெய்யாகாது, வேதாந்த ஞானிசகாதேவனாலே விளம்பியுவித்

தொடுகுறியோ வீண்போகாது, ஆதார மிதைவிடவேறினங்கிட்டாது அண்டசராசரத்திற்கு மடுத்தநூலாம், தீதுடனே நன்மையிரண்டு தெரிந்துகொள்ள தெளிவாக விவரமதை தெரிவிப்பேனே. 5

தெருகிடவே வட்டமாய் மெழுகிமைந்தா தெரிவையர்கள் பஞ்சளினுல் கணேசர்வைத்து, அருகினிலே தாம்பூலம் கதலி வெல்லம் அணுவேனும் கற்பூரங் கொளுத்திவைத்து, பரிவாக நீ வணங்குங் குலதெய்வத்தைப் பாணம்வரைச் சிந்தையிலே பதிய வைத்து, சிறுபயலாங் கன்னியிடம் மலரையீந்து சக்கரத்திலெதுவேனுந் தீண்டச்சொல்லே. 6

தீண்டியதோர் லக்கமதை குறித்துக்கொள்ளு தெய்வமொழி பாட்டினைத் தேடிப்பாரு, வேண்டியே தொட்டதொரு லக்கம் போலே வருகின்ற செய்யுள்தனை வாசித்தாக்கால், காண்டீபன் தம்பியுட கருணையாலே கலக்கமது விலகுமடா கண்ணாடிபோலே, பாண்டவர்கள் தொடுகுறியைப் பரிட்சிப்போர்க்கு பத்தினி திரௌபதைகிருபை பலிக்கும்பாரே. 7

நூன்முகம் முற்றிற்று.

கால நிலை

வாரங்கள்	இராகு		குளிகை		எமகண்டம்		வாரசூலை		மணி
ஞாயிறு	4-30	6	3	4-30	12	1-30	மேற்கு	கா	10-48
திங்கள்	7-30	9	1-30	3	10-30	12	கிழக்கு	,,	9-12
செவ்வாய்	3	4-30	12	1-30	9	10-30	வடக்கு	,,	10-48
புதன்	12	1-30	10-30	12	7-30	9	வடக்கு	மா	12-24
வியாழன்	1-30	3	9	10-30	6	7-30	தெற்கு	,,	2-00
வெள்ளி	10-30	12	7-30	9	3	4-30	மேற்கு	,,	10-48
சனி	9	10-30	6	7-30	1-30	3	கிழக்கு	,,	9-12

4	8	1
2	9	5
3	7	6

சீதா சக்கரம்

1-லாபம் 4-பீடை 7-தனம்

2-நாசம் 5-க்ஷேமம் 8-மரணம்

3-சிநேகம் 6-கலகம் 9-பிரீதி

இந்த சீதா சக்கரத்தில் கண்ட நெம்பரை ஒரு சிறுவனைக் கைகால் சுத்திசெய்து விரசொல்லி ஒரு புட்பங்கொடுத்து நெம்பரை ஊனச்சொல்லிப் பலன்களைத் தெரிந்துகொள்ளவும்.

A 864 N57
18196

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

சாஸ்திரக்கொடியோனாகிய

சகாதேவர் அருளிச்செய்த

தொடுகுறி சாஸ்திரம்

நன்மை தீமை அறியும் சக்கரம்

111	112	113	114	121	122	123	124
131	132	133	134	141	142	143	144
211	212	213	214	221	222	223	224
231	232	233	234	241	242	243	244
311	312	313	314	321	322	323	324
331	332	333	334	341	342	343	344
411	412	413	414	421	422	423	424
431	432	433	434	441	442	443	444

விருத்தம்

பேர்வளரும் ஆறென்னும் சாஸ்திரத்தில்
பேசியதோர் தொடுகுறியின் பெருமைகேளீர்
சீர்வளரும் ஐவருக்கு இளையதம்பி
சிரஞ்சீவி சகாதேவர் சொன்னவாக்கு
கார்வளர்போல் கண்டுமனந் தெளிவதற்கு
கருணைமொழி சிவனயன்மால் குகனுஞ்சாட்சி
தார்வளர்போல் இப்பொருளை வெளியாய்ச்செய்ய
தகுபஞ்ச பாணிசுதன் காப்புதானே.

காப்பு விருத்தம்

பஞ்சபாண்டவரின்பாதம் பலதினந்தொழுதுபோற்றி
அஞ்சமாபெவர்க்குநன்மை தொடுகுறி நூலைச்சொல்ல
செஞ்சிமாநகரம்வாழும் சிறுவனேகாம்பரன்றன்
தஞ்சமாய்குருவின்பாதம் தாள்பணிந்தேற்றினேனே.

111-வது

அறியவே நூற்றுபதி னொன்றைத்தொட்டாய்
அப்பனே கேட்குமொரு செய்திகேளு
குறைவின்றி காரியங்கள் செயமேயாகும்
கொற்றவனே ஒருவருடம் குறைவேயில்லை
பெருமையுடன் எதிரியைநீ வெல்வாயப்பா
பேசியதோர் நாள்கிரகம் வீட்டுநன்மை
குருமொழிபோல் சொன்னகுறி யுண்மைகாண
குறிப்புண்டு வலதுதோளில் மச்சந்தானே.

(வ-ம்) நீ நினைத்த காரியம் ஜெயமாகும், எதிரியை வெல்வாய், நீ தொட்டவேளையும் நன்றாயிருக்கிறது, உன் வீட்டுக்காரியமும் ஜெயமாகும். இந்தராசி உனக்கு ஒருவருடம் குறைவில்லாமலிருக்கும், இதற்கு அடையாளம் வலதுபுஜத்தின்பேரில் மச்சமிருக்கும் பார்க்கவும்.

112-வது

நன்மையென்ற யோசனையை மனதிலெண்ணி
நாட்டமாய் நூற்றுபனி ரெண்டைத்தொட்டாய்
உன்னுடைய மனம்போலே முடியாதப்பா
ஒருவரா க்ஷேபனையால் திண்ணமாகும்
மன்னவனே யுன்மனைவி வுளவுமுண்டு
மாகாளி யுருவமதைப் படைத்தமாது
நன்மையாம் மனம்போலே நடப்பதற்குத்
தளராமல் தேவதைக்குப் பூசைபோடே.

(வ-ம்) நல்ல காரியத்தை மனதில் நினைத்து தொட்டதால் அந்தக் காரியங் கைகூடாது அது ஏனென்றால் உன் பெண்சாதி நடுவில் தூதாயிருக்கிறாள், ஆகையால் அந்தக்காரியம் தாமதத்தில் கூடும். குலதேவதைக்குப் பூசைபோடு பலிக்கும்.

113-வது

கேளப்பா நூற்றுபதின் மூன்றைத்தொட்ட
கண்மணியே கேட்குமொரு சேதிகேளு
தாளப்பா புத்திரர்கள் தழைத்துவாழ்வாய்
தனலாபங் குறைவில்லை மிகவேயுண்டு
மீளப்பா செயகால முதவியாச்சு
மைந்தனே படுந்துன்பம் விலகிப்போச்சு
கேளப்பா சொன்னமொழி நம்பிப்பாரு
கிருபையொடு குறுமுனியுங் காப்பார்தானே.

(வ-ம்) நீ தொட்டகுறி தனலாபங்கிடைக்கும். புத்திரபாக்கியமுண்டு. மனக்கவலை நீங்கி சந்தோஷமடைவாய் உனக்கு கிரகங்கள் நன்றாயிருக்கிறது, அதனால் சுகம் உத்தமம்.

114-வது

மைந்தனே நூற்றுபதி ஞன்கைத்தொட்டாய்
மகாநன்மை வருத்தமது விலகிப்போச்சு
சிந்தையது களித்திடுவாய் லாபமுண்டு
சிமான்போ லுனக்கொருவர் வுதவியாவார்
வந்திடுவார் யின்னமூன்று மாதத்தின்மேல்
வளமாக குருவுனக்குப் பலனைக்கூட்ட
இந்தவிதம் யார்சொல்வார் சித்தர்சொல்வார்
இயம்பியதோர் சகாதேவர் நூலைநம்பே.

(வ-ம்) நீ நினைத்த காரியம் நன்மையாகும், இது ஒரு சிநேகிதரால் உதவியாகும் லாபங்கிடைக்கும், உனக்கு இன்னம் மூன்று மாதத்தின்மேல் குரு நல்லவராக வருவார் உத்தமம்.

121-வது

தொட்டதொரு லக்கினத்தின் விபரங்கேளு
தொல்லையென மனவருத்தம் விலகிப்போச்சு
இஷ்டகுல தேவதைக்குப் பூசைபோடு
எதிர்படவே சிநேகிதரால் வுதவியாகும்
நஷ்டமில்லை வியாபாரம் பலிக்குமப்பா
சுயமென்றே வுன்மொழியை நம்புவார்கள்
கெட்டியென்றே முன்னோர்கள் சொன்னவாக்கை
கண்மணியே நம்பியுந்தன் கவலைதீரே.

(வ-ம்) நீ தொட்ட லக்கத்தில் மன வியாகூலந்தீரும், ஒரு சிநேகிதனால் உதவியுண்டு லாபங்கிடைக்கும், குல தேவதைக்குப் பூசை போடவும், சகலமுங் கைகூடுமென்று முன்னோர் கூறுகிறார் உத்தமம்.

122-வது

நூற்றுடனே யிருபத்து ரெண்டைத்தொட்டால்
நம்பியதோர் வியாபாரம் வலுத்தமாகும்
தோற்றதொரு பொருளெல்லாம் வந்துசேரும்
துணையென்று ஒருவரையும் நம்பவேண்டாம்
நேற்றியதாய் வுன்மனந்தான் ருசிக்கப்பேசி
நஷ்டமதை வைத்திடுவார் சிநேகரப்பா
பார்த்திடுவாய் சொன்னமொழி நம்பிநீயும்
பாலகனே யிதன்பரிட்சை பாரில்மீதே

(வ-ம்) நீ நினைத்த காரியம் பலிக்கும் வியாபாரம் விர்த்தியாகும், கைவிட்டு போனபொருள் வந்துசேரும் சிநேகிதரை நம்ப வேண்டாம், நல்லவராகப் பேசி மோசம் செய்வார்.

123-வது

துன்பமது வுன்னைவிட்டு விலகிப்போச்சு
தொட்டதொரு குறியினிட நன்மையாலே
இன்பமுறு பந்துவுக்கு ஆகாச்செய்கை
யிருக்குதப்பா வுன்னிடத்தில் விட்டுநீக்கு
தென்புறவே யின்னமைந்து தினத்திற்குள்ளே
துலைவிலிருந்து சேதிகண்டு மகிழப்போறாய்
அன்புறவே யினிவுனக்குக் குறைவேயில்லை
ஆதிசிவன் சாட்சிபதா பறையக்கேளே.

(வ-ம்) இப்போது தொட்டகுறியால் மனக்கவலை தீரும் ஆனால் உன்னிடத்தில் ஒரு கெட்ட செய்கை யிருக்கிறது. அதில் உன்னுடைய பந்துக்களுக்கு விரோதமாயிருக்கிறாய். அச்செய்கையை நீக்கிவிட்டால் இன்னம் ஐந்து தினத்திற்குள் துலைவிலிருந்து நல்லசேதிவரும் சந்தோஷப்படுவாய்.

124-வது

அஞ்சாதே தொட்டதொரு குறியைக்கேளு
அப்பனே யினியொன்றுங் குறைவேயில்லை
வஞ்சனைசெய் பகையாளர் வுறவேயாவார்
வகைதப்பிப் போனபொருள் வந்துசேரும்
நெஞ்சதனில் நினைந்ததொரு பெண்ணங்கூடும்
நினைக்கவே செய்தொழிலும் லாபங்காணும்
கொஞ்சநாள் கழியுமிவ் வருடங்கூடும்
குறுமுனியின் சாட்சிபதாய்க் கூறினேனே.

(வ-ம்) நீ தொட்டகுறி நூற்றிருபத்தினாலாகையால் இனி உனக்குக் குறைவில்லை, பகையா யிருந்தவர்கள் உறவாகுவார்கள் உன் கைவிட்டுப் போனபொருள் வந்துசேரும், செய்தொழிலில் லாபங் கிடைக்கும், நினைத்த காரியம் இந்த வருடம் கைகூடும், குலவிர்த்தியாகும் உத்தமம்.

131-வது

தொட்டகுறி நூற்றுமுப்பத் தொன்றதாலே
தோஷமில்லை பெண்ணமது முடியுமப்பா
விட்டுதப்பா நவக்கிரகப் பூசைசெய்ய
வெகுநாளாய் வுன்னைத்தொட்ட பீடையெல்லாம்
பொட்டெனவே பின்னொருத்தி சிநேகமாவாள்
பொருளுடனே லாபம்வரும் கவலைவேண்டாம்
இட்டமுடன் யிந்நூலை நம்பினோர்க்கே
யெந்நாளுங் குறைவில்லை யென்றார்தானே.

(வ-ம்) நீ தொட்ட குறியால் ஜயமாகும், பெருத்த ஆலோசனை பண்ணியிருக்கிறாய், அது ஒரு பெண்ணால் முடியும், நீ நவக்கிரகப் பூசை செய்துவரவும் ஜயமாகும்.

132-வது

மத்திபம் நூற்றுமுப் பத்திரண்டில்
மனவருத்தம் தொட்டகுறி பொருளும்நஷ்டம்
சித்தமுங் கலக்கமாய் வியாதிசேரும்
செய்தொழிலும் கைவிட்டுச் சோருமப்பா
உத்தமனே யுன்மனைவி பகையாளாவாள்
வுலகமகிழ் தொடுகுறியின் வுண்மைசொன்னேன்
அத்திபெற்ற முன்னோர்கள் சொன்ன நூலை
மூடரல்லோ பொய்யென்று மொழிகுவாரே.

(வ-ம்) நீ நினைத்தகாரியம் ஆகாது, பொருள் நஷ்டம்வரும், திரேகம் அசௌகரியமாய் வியாதிவரும், உன் பெண்ஜாதியும் பகையாவாள், செய்தொழிலும் கைவிட்டுப்போகும் மத்திபம்.

133-வது

காணவே நூற்றுமுப் பத்திமூன்றை
கண்மணியே தொட்டதினால் நன்மையுண்டு
வேணவே பெரியோரா லுதவியாகும்
வருகுமொரு பெதிரியைநீ வெல்வாயப்பா
தோணவே உந்தன்குல தேவதைக்கு
தொழுதுமே பூஜைசெய்து வந்தாயானால்
பூணவே லாபமுண்டு வீட்டுநன்மை
புண்ணியனே சொன்னமொழி நம்பிப்பாரே.

(வ-ம்) நீ நினைத்த காரியம் ஜெயமாகும், ஒரு பெரிய மனுஷர் உதவியாவார், உன்னெதிரியை வெல்வாய், ஆனால் உன் வீட்டுக் காரியமும் நன்மையாகும். குலதேவதைக்குப் பூசைபோடவும் உத்தமம்.

134-வது

அறியவே நூற்றுமுப் பத்திநாலை
அப்பனே தொட்டதொரு செய்திகேளு
தெரியவே வியாபாரம் விர்த்தியாகும்
தயங்குகன்ற திரேகத்தின் பீடைநீங்கும்
வருகுமொரு பெதிரிகளும் விலகிநிற்பார்
வையமிசை புத்திரரைப் பெற்றுவாழ்வாய்
குருமொழிபோல் சகாதேவன் சொன்னவாக்கு
குவலயத்தில் கண்டுமன மகிழுவாயே.

(வ-ம்) நீ நினைத்தகாரியம் ஜெயமாகும், வியாபார விர்த்தியாகும், உன் எதிரிகளெல்லாம் விலகிப்போவார், உன் திரேக

பீடையு மொழியும், புத்திரபாக்கியம் உண்டாகும், இதுகளெல்லாம் நாளுக்குநாள் கைகூடும் உத்தமம்.

141-வது

எண்ணிவந்த விவாகமது கூடுமப்பா
யிசையவே நீதொட்ட குறியினாலே
பண்ணவே லாபம்வரும் கவலைவேண்டாம்
பகையாளர் அண்ணன்தம்பி யுறவேயாவார்
நண்ணியே பந்துஜனம் வுறவேயாவார்
நஷ்டமில்லை எத்தொழிலும் பலிக்குமப்பா
கண்மணியே ஒருவரது சகாயம்வேண்டாம்
கருத்ததுபோல் நடத்திமனக் கவலைதீரே.

(வ-ம்) நீ தொட்டகுறி நூற்றுநாற்பத்தி ஒன்றானதால் நினைத்துவந்த கல்யாணகாரியம் முடியும், தனலாபங் கிடைக்கும், பகையாயிருந்த அண்ணன் தம்பிகள் உறவாவார்கள், பந்துஜனம் உதவியாகும், தைரியம் விடவேண்டாம், ஒருவர் தாட்சண்யமில்லாமல் நடத்தலாம் ஜெயமாகும் உத்தமம்.

142-வது

சீராகத் தொட்டகுறி செப்பிகேளு
செல்வது பெருகுமடா விவாகம்கூடும்
தேராமல் வாழ்ந்திடுவாய் துணிவாய்நீயும்
துணைகொண்ட சிநேகிதனை நம்பவேண்டாம்
நேசாக முன்னொருநாள் மோசம்போனாய்
நாட்டமதை வீட்டின்மேல் வைத்துக்காரு
பேராக அம்மனைநீ பூசைசெய்ய
பலிக்குமடா சகலமும்நீ பயப்படாதே,

(வ-ம்) நீ தொட்டலக்கம் நூற்றுநாற்பத்திரண்டானதால் தனலாபங் கிடைக்கும், விவாகங்கூடும். ஆனால் நீ ஒரு சிநேகிதனை நம்பியிருக்கிறாய், அவன் கெட்ட யெண்ணம் வைத்திருக்கிறான், அவனை நம்பவேண்டாம், அதேனென்றால் நீ முன்னொருதடவை மோசம் போயிருக்கிறாய், வீட்டுக்கியாபகமாயிரு, அம்மனைப் பூசைசெய்ய சகலமும் நன்மையாகும்.

143-வது

நூற்றுநாற்பத்திமூன்றைத் தொட்டதால்கூறக்கேளாய்
தோற்றிடும்பொருளுஞ்சேரும் தர்மவான்சிநேகமாவான்
தேற்றியகஷ்டந்தீரும் திரவியலாபமாகும்
ஆத்திரப்படவேவேண்டாம் அம்மனைபூசைசெய்யே.

(வ-ம்) நீ நினைத்தகாரியம் ஜெயமாகும், நல்ல தர்மமுள்ள சிநேகிதரால் உதவியுண்டு மனக்கவலை தீரும், தனலாபங் கிடைக்கும், உன்னுடைய குலதேவதைக்குப் பூசைபோட சகலமுங் கைகூடும்.

144-வது

கண்மணியே நூற்றிநாற் பத்திநான்கை
கருத்துடனே தொட்டதினுல் வருத்தமில்லை
ண்ணவே பெரியோரால் வுதவியுண்டு
பலமான வுத்தியோகங் கிடைக்குமப்பா
எண்ணங்கள் வெவ்வேரு யெண்ணவேண்டாம்
யெத்தொழிலைச் செய்தாலும் பலனேகாணும்
திண்ணமென்று மூடரல்லோ யிதனைச்சொல்வார்
தெரிந்தவர்க்கு யிந்நூலை சிரேஷ்டந்தானே.

(வ-ம்) நினைத்த காரியம் ஜெயமாகும், ஒரு பெரிய மனுஷ ரால் உதவியாகும், பலமான உத்தியோகங் கிடைக்கும், வியா பாரம் விருத்தியாகும், தனலாபம் கிடைக்கும், வீட்டுக் காரியஞ் ஜெயமாகும்.

211-வது

சித்தத்தில் நினைத்ததொரு யெண்ணங்கூடும்
ஜெயமாகும் குடும்பமது விருத்தியோடே
புத்திரரு மிகப்பெறுவாய் பொருளுஞ்சேரும்
போரேனென்ற வெளியூரின் ஆசைநீக்கு
உத்தமனே உன்னிடத்தில் தேவபூசை
உறுதிகொண்ட யெண்ணத்தால் போகொணுது
பத்தியாய் நாற்பத்தி ஐந்துநாளும்
பாலகனே ஒழிய கைகூடும்பாரே.

(வ-ம்) நீ இருநூற்றுபதினென்றைத் தொட்டதால் நினைத்த காரியம் கைகூடும், குடும்ப விருத்தியாகும், புத்திரலாபமுண்டு, ஆனுல் நீ வெளியூர்போக யெண்ணங்கொண்டிருக்கிருய் அது கூடாது, ஏனென்ருல் உன்னிடத்தில் தேவபூசை யிருக்கிறது, அதனுல் இன்னும் நாற்பத்தைந்துநாள் கழிந்தால் கைகூடும் உத்தமம்.

212-வது

மன்னவனே நீதொட்ட லக்கத்தாலே
மனவருத்தம் சீக்கிரத்தில் தீருமப்பா
சொன்னபடி பொருள்சேரும் குடும்பவிர்த்தி
சுத்தமுள்ள வீட்டுக்காரியமும் நன்மை
உன்னுடைய ஜென்மத்மை வி[illegible]டோராகு
ஒழிந்திடுவான் யின்னமெட்டு தினத்திற்குள்ளே
தன்மையுடன் தொடுகுறியின் வுண்மைப்பாரு
தப்பினுல் சாஸ்திரத்தைச் சுட்டுப்போடே.

(வ-ம்) நீ தொட்டலக்கம் இருநூற்று பன்னிரண்டாகையால் மனக்கவலை தீரும், தனலாபங் கிடைக்கும், குடும்பவிர்த்தியாகும்,

வீட்டுக்காரியம் ஜெயமாகும், உன்னுடைய ஜென்மத்தில் இராகு யிருக்கிறுன், இன்னம் எட்டுதினத்தில் ஒழிகிறுன்.

213-வது

இருநூற்று பதின்மூன்றைத் தொட்டதாலே
எத்தொழிலைச் செய்தாலும் அதிகலாபம்
உறவற்றுப் போனபொருள் வந்துசேரும்
உத்தமனே வெளியூரில் கிடைக்கும்லாபம்
தெரிவித்தேன் உனக்கெதிரி பொருவனுண்டு
தம்பியடா அவனையும்நீ நம்பவேண்டாம்
அறிவித்தேன் தைரியத்தைநீ விடவேண்டாம்
அப்பனே பொருளொன்று நஷ்டமாமே.

(வ-ம்) நீ தொட்டகுறியில் லாபங்கிடைக்கும், கைவிட்டுப் போன பொருள்வரும், வெளியூரில் லாபங்கிடைக்கும், நீயுந் தைரியம் விடவேண்டாம், ஆனால் உனக்கு முன்னுதாய் ஒரு பொருள் நஷ்டமாகும், அதற்கு பயப்படவேண்டாம், பின்னுல் லாபங்கிடைக்கும் உத்தமம்.

214-வது

இருநூற்று பதினுன்கைத் தொட்டதாலே
எவ்வளவோ ஒருவருஷம் வருத்தப்பட்டாய்
குறைவின்றி கேட்டநாள் தொடங்கியப்பா
கொற்றவனே யேழுநாள் கழிந்துதானுல்
பிரியமுட னிரண்டாண்டு குறைவேயில்லை
பட்டதொரு துன்பமெல்லாம் விலகிப்போச்சு
மர்மமெல்லாம் வழியாகச் சொன்னேனப்பா
மைந்தனே விட்டதொழில் மகிழ்ந்துசெய்யே

(வ-ம்) நீ தொட்டது என்னவென்றுல் நீ ரொம்பவும் ஒரு வருஷம் வருத்தப்பட்டாய் வருத்தம் நீங்கிவிட்டது இப்பொழுது நீ கேட்ட நாள் தொடங்கி இன்னும் ஏழுநாள் கழிந்தால் இரண்டு வருஷம் குறையில்லாம லிருப்பாய், நீ முன்னே செய்த தொழிலை விட்டு யிருக்கிறுய் அதைச் செய்யவும், சகலமும் நன்மையாகும் உத்தமம்.

221-வது

மண்டலத்தில் தொடுகுறியின் மர்மங்கேளாய்
மர்மமாய் நினைத்தபொருள் முடியாதப்பா
விண்டதப்பா பெத்தொழிலும் பலியாதென்று
வீணுகப் பலர்சொல்லைக் கேட்கவேண்டாம்
சண்டையது சிநேகிதத்தால் நேருமப்பா
சனியனுட கூத்தாலே புத்தனுக்கு

கண்டதொரு யிம்மாதங் கழிந்துதானல்
கண்மணியே கவலையெல்லாங் கடந்துபோமே.

(வ-ம்) நீ தொட்டகுறி இருநூற்று யிருபத்தொன்ருகையால் நினைத்தகாரியம் கைகூடாது, எந்தவேலை செய்தாலும் பலியாது, ஒருவர் சொல்லைக் கேழ்க்கவேண்டாம், சிநேகித காரியத்தில் சண்டையாகும். ஆனல் நீ கேட்டநாள் துடங்கி முப்பதுநாள் போனல் பலிக்கும் மத்திபம்.

222-வது

தொட்டதோர்குறியினலே துன்பமும்மிகவுண்டாகும்
மட்டதுவெடுத்தவேலை மத்திபமபாயம்நேரும்
கெட்டதோர்யெண்ணமுந்தன் கருத்தினில்கூடிவாழும்
விட்டிடவந்தயெண்ணம் வெகுசுகமென்ருர்முன்னேர்.

(வ-ம்) நீ இருநூற்றி இருபத்திரண்டைத் தொட்டதால் எந்தவேலை செய்தாலுங் கைகூடாது, அபாயம் வரும். உன் மனதில் கெட்ட எண்ணம் இருக்கிறது, அந்த எண்ணத்தை விட்டு விடு சுகம்.

223-வது

தொட்டதோர்குறியினலே துலைந்ததுதுன்பமெல்லாம்
விட்டதுகிரகமெல்லாம் வந்ததுநல்லகாலம்
சட்டெனபதறவேண்டாம் சகலமும்கைதான்கூடும்
பொட்டெனவுரைத்தவாக்கை புத்தியில்மதித்துப்பாரே.

(வ-ம்) நீ தொட்டகுறி இருநூற்றி இருபத்திமூன்ருகையால் நினைத்தகாரியம் ஜெயமாகும் உன்னுடைய கிரகமெல்லாம் நன்ருயிருக்கிறது. தனலாபங் கிடைக்கும் குறைவில்லை உத்தமம்.

224-வது

எண்ணியேதொட்டலக்கம் எடுத்ததோர்வேலைசாயும்
நண்ணியேஒருவருக்கு நல்லுபகாரஞ்செய்ய
புண்ணியயெண்ணந்தன்னை பகர்ந்துநீபரிந்துசெய்ய
திண்ணமும்வாராதப்பா ஜெயமதுபலிக்கும்பாரே.

(வ-ம்) இருநூற்றியிருபத்திநான்கைத் தொட்டதால் அட்டியில்லாமல் எடுத்தவேலை முடியும். ஆனல் நீ ஒருவருக்கு உபகாரஞ்செய்ய எத்தனித்திருக்கிருய், அதை ஆலோசித்துச் செய்யவும் நன்மையாகும்.

231-வது

பலித்ததுதொட்டலக்கம் பகையதுதொலைந்துபோச்சு
கெலித்ததுநினைத்தவேலை கொஞ்சநாள்கழியக்கூடும்
சலித்திடவேண்டாமையா சாஸ்திரமொழியைப்பாரு
நிலைத்ததைநம்பினேர்க்கென் னளுமேசுகமென்ருரே.

(வ-ம்) இருநூற்றி முப்பத்தொன்றைக் தொட்டதால் நினைத்த காரியம் ஜெயமாகும். நீ ஒரு காரியத்தைப்பற்றி நினைத்திருக்கிறாய், அது இன்னும் கொஞ்சநாளில் கைகூடும், பயப்படவேண்டாம் உத்தமம்.

232-வது

இக்கட்டுந்துலேந்துபோச்சு எடுத்ததோர்பேரஞ்சாயும்
திக்கெட்டுங்கீர்த்திபெற்ற தீரமுமிகவுண்டாகும்
பக்குவமானவீட்டில் பலித்ததுகிரகமெல்லாம்
சிக்கெனவாழ்ந்தாயானல் செல்வமும்பெருகுமென்றார்.

(ங-ம்) நீ தொட்டது இருநூற்றி முப்பத்திரண்டாகையாற் மனவருத்தம் நீங்கிவிட்டது, ஜெயகால முதவியாயிற்று கிரகங்கள் நல்ல வீட்டிலிருக்கின்றது, தனலாபங் கிடைக்கும் உபாயமாய் வரவும்.

233-வது

அறிந்திடுவாய் நீதொட்ட குறியின்உண்மை
அலட்டுதப்பா வுன்மனதிலே விசனமொன்று
தெரிந்திடுவாய் வெளியூரின் விசனமொன்று
தக்கசிநே கிதன்பிரிந்த விசனமொன்று
துறந்திடுவா யின்னொருவன் சிநேகமாவான்
துஷ்டனப்பா வுனக்கெதிரி யவனேயாகும்
பிரிந்திடுவாய் அவனையும்நீ விட்டுநீங்க
பேசியயித் துன்பமெல்லாம் விலகிப்போமே.

(வ-ம்) நீ தொட்டகுறி இருநூற்றி முப்பத்திமூன்றுகையால் உன் மனதிலே விசனமொன்று, வெளியூர் விசனமொன்று, நல்ல சிநேகிதனைப் பிரிந்த விசனமொன்று யிருக்கிறது. ஆனால் இப்போது ஒரு சிநேகிதனைக் கூடியிருக்கிறாய், அவன் உனக்கு வைரியாயிருக்கிறான், அந்த சிநேகத்தைவிட்டு நீங்கவும் பலிக்கும்.

234-வது

ஜெயமது பலித்துப்போச்சு சித்தமுங் கலங்கவேண்டாம்
நயமுட னிரண்டுபக்கம் லாபமும் கிடைக்குமப்பா
தயவது உள்ளோன்நல்ல தர்மவான் சிநேகமாவான்
பயமது யில்லைசத்துரு பாவியுந் துலைவானென்றார்.

(வ-ம்) இருநூற்றி முப்பத்திநான்கைத் தொட்டதால் உனக்கு இரண்டுபக்கம் லாபங்கிடைக்கும், நல்ல சிநேகிதர் கூடுவார், அதனால் உன் மனக்கவலை தீரும், உன் சத்துரு நாசமாவான் ஜெயமாகும்.

241-வது

கேளப்பா தொட்டதொரு குறியைச்சொல்வேன்
கண்மணியே விவாகத்தின் விசனமொன்று

கேளப்பா வெளியூரின் விசனமொன்று
கருத்துள்ள சிநேகிதன்மேல் விசனமொன்று
கேளப்பா உன்னுடைய குடும்பந்தானே
கெடுதிசெய்ய உனக்கெதிரி ஒருவனுண்டு
கேளப்பா அவனையும்நீ விலக்கிவிட்டால்
கவலையெல்லா மொழிந்துசுகப் படுவாய்தானே.

(வ-ம்) நீ தொட்டகுறி இருநூற்றி நாற்பத்தி ஒன்றாகையால் உனக்கு விவாகத்தின் விசனமொன்று, இன்னும் உன் குடும்பத்தில் ஒருவனிருக்கின்றான், அவன் கெட்ட எண்ணம் வைத்திருக்கின்றான், அவனைவிட்டு நீங்கினால் சுகப்படுவாய் நம்பு.

242-வது

குறைவதுயில்லையென்று கூறியமொழியைநம்பு
பெருமையாய்வீட்டிற்சொன்ன பேச்சதுமுடியுமப்பா
மர்மமுங்கவலைதீரும் மற்றவர்தன்னைக்கொண்டு
தருவனேயோசித்தாலுந் தாட்டியாய்முடியுந்தானே.

(வ-ம்) நீ தொட்ட லக்கம் இருநூற்றி நாற்பத்திரண்டாகையால் மனக்கவலை தீரும், வீட்டில் யோசித்தகாரியம் ஜெயமாகும், இல்லாவிட்டால் இன்னும் பாரைபாவதுகொண்டு யோசித்தாலும் முடியும், எதிரி நாசமாவான்.

243-வது

இருநூற்றி நாற்பத்தி மூன்றைத்தொட்டாய்
எத்தொழிலைச் செய்தாலும் பலிக்குமப்பா
தருணத்தில் தனலாபந் தேகாரோக்கியம்
தம்பியடா விட்டகா ரியமுமாகும்
அறியவே வுத்தியோகம் புத்திரபாக்கியம்
அப்பனே தடையின்றி யாகுமப்பா
தெரியவே தைரியத்தை விடவேவேண்டாம்
தடையின்றி நினைத்ததொழில் செய்துப்பாரே.

(வ-ம்) நீ தொட்ட சாஸ்திரத்தில் புத்திரபாக்கியம் உண்டாகும், தேகசௌக்கியமாகும், உத்தியோகங் கிடைக்கும், தனலாபங் கிடைக்கும், எந்தவேலை செய்தாலும் ஜெயமாகும், விபரித்துச் செய்யலாம் தைரியம் விடவேண்டாம் நம்பு உத்தமம்.

244-வது

சித்தமது கலங்காதே அப்பாகேளு
செல்வமது பெருகுமடா தொட்டலக்கம்
உத்தமனே கிரகங்கள் பலனைக்கூட்டும்
உறவுகொண்டு சிநேகிதனை நம்பவேண்டாம்

பத்தியவ னுனைக்கெடுக்க வெண்ணங்கொள்வான்
பாலகனே அவனுறவை நீக்கிவிட்டால்
எத்தொழிலைச் செய்தாலும் பலிக்குமென்று
இயம்பிய சகாதேவர் நூலைநம்பே.

(வ-ம்) நீ தொட்டலக்கம் இருநூற்றி நாற்பத்தினன்காகை யால் உன்பீடை துலைந்துபோயிற்று, கிரகங்கள் நல்லதாயிருக்கிறது. நீ ஒருவனை நம்பியிருக்கிறாய், அவன் மனதில் கெட்ட வெண்ணம் வைத்திருக்கிறான். அவனை நம்பவேண்டாம், உன் மனம்போலச் செய்தால் பலிக்கும் குறைவில்லை.

311-வது

பாலகா தொட்டலக்கம் பணத்தினிட விசனமொன்று
சாலவே வுனக்குமெத்த சஞ்சலம் வெளியூராலே
சீலமாங் குலதேவதைக்கு சிறப்புடன் பூசைசெய்ய
மேலது பெறுவாயப்பா மர்மமும் வெளியாய்சொன்னேன்.

(வ-ம்) நீ தொட்ட லக்கம் முன்னூற்றிப் பதினொன்றாகை யால் உனக்குப் பணத்தினிட விசனமொன்றிருக்கிறது. வெளியூர் விசனமொன்று யிருக்கிறது, அதுகளெல்லாந் துலைவதற்கு உன்னுடைய குலதேவதைக்குப் பூசைபோடு கைகூடும்.

312-வது

மனமது கவலைவேண்டாம் மருவிய பொருளுஞ்சேரும்
கனமுடன் குடும்பவிர்த்தி களிப்புற புத்ராருண்டு
வினைமுதல் மெய்யில்வாழும் வியாதியும் பறந்துபோகும்
இனமுடன் தொட்டவேலை பேகமாய் பலிக்கும்பாரே.

(வ-ம்) நீ முன்னூற்றுப் பனிரெண்டைத்தொட்டதால் மனக் கவலை தீரும், தனலாபங் கிடைக்கும், குடும்ப விர்த்தியாகும், புத்திரலாபமுண்டு, திரேகத்தின் வியாதி தீரும், எந்தத் தொழிலைச் செய்தாலும் பலிக்கும் தைரியம் விடவேண்டாம் உத்தமம.

313-வது

பணமென்ற ஆசையது மெத்தவுண்டு
பலிக்குமது நினைத்தபடி பயப்படாதே
குணமில்லா வுனக்கெதிரி யனேகருண்டு
கோடிபே ரெதிர்த்தாலு முனக்கேலாபம்
மனமறிய வுந்தன்குல தேவதைக்கு
மாதமொரு பூசையது புரிந்தாயானால்
தினமாக சகலமுமுன் மனம்போற்கூடும்
யேதொன்று மஞ்சாகே ஈசன்சாட்சி.

(வ-ம்) நீ முன்னூற்றுப் பதின்மூன்றைத் தொட்டதால் உனக்குப் பணத்தினிட ஆசையிருக்கின்றது, அது தடையில்லாமற்

பலிக்கும், ஆனல் உனக்கு எதிரிகள் அதிகமாய் இருக்கிறார்கள். இருந்தாலும் பயமில்லை உனக்கு லாபங்கிடைக்கும், நீ உன் குல தேவதைக்கு மாதத்திற்கொரு பூசைபோடு கைகூடும் உத்தமம்.

314-வது

உன்னிட கிரகநன்மை வுடனேமுன் விவாகங்கூடும்
தன்னிக ராகவாழ்வாய் தர்மமும் மனதிலெண்ணு
விண்ணவ ருதவியுண்டு வழுத்திடுஞ் சோமவாரம்
எண்ணியே விரதங்காக்க எத்தொழில் பலிக்குமென்றார்.

(வ-ம்) நீ முந்நூற்றி பதினன்கைத் தொட்டதால் நினைத்த காரியம் முடியும், கலியாணங் கைகூடும், சம்பத்தாய் வாழ்வாய், தர்மம் பண்ணு, நீ திங்கட்கிழமைதோறும் விரதமிரு, ஈஸ்வரன் துணையா யிருப்பார்.

321-வது

வருத்தமு மிகவுண்டாகும் வாடியே மெய்யுஞ்சோரும்
கருத்துட னெதைச்செய்தாலுங் கைப்பொருள் விரயமாகும்
இருபத்தி யொன்றுமாதம் யேகபின் சுகமுண்டாகும்
தெரிவித்த மொழியைநம்பு தைரியங் கொண்டிடாயே.

(வ-ம்) முந்நூற்றிருபத்தொன்றைத் தொட்டதால் மன வருத்தமா யிருக்கிறாய் நினைத்த காரியம் மத்திபம், துணிவாய் ஒரு தொழிலைச் செய்தாலும் நஷ்டம், எந்தவேலை செய்தாலும் விசாரித்துச்செய், உனக்கு இருபத்தோருமாதம் போனபிறகு சுகமாகும் மத்திபம்.

A:864 NS

322-வது

உள்ளத்தின் கவலைதீரும் வுன்னுடன் பிறந்தோராலே
தெள்ளிய லாபஞ்சேரும் திறமுடன் வருஷந்தன்னில்
கள்ளமு மில்லைசொன்னேன் கைபது விட்டவேலை
வள்ளலின் கிருபையாலே வருமென் றுரைத்திட்டாரே.

(வ-ம்) நீ தொட்டலக்கம் முந்நூற்றிருபத்திரண்டாகையால் நினைத்தகாரியம் அண்ணன் தம்பியால் முடியும், இந்த வருஷத்தில் காரியஞ் சித்தியாகும், போனவேலை வரும், நீ எத்தனஞ் செய்ய உத்தமம்.

323-வது

சந்தேகமில்லை சொன்னேன் சார்ந்திடும் வெளியூர்லாபம்
வந்திடும் எதிரிநாசம் வருத்தமுங் கவலைதீரும்
சிந்தையுங் களிக்கநீயுந் தொல்லை[illegible]யாளங்கேளு
அந்தமா யிடதுகண்[illegible] [illegible]முச்சப்பாரே.

(வ-ம்) நீ முந்நூற்றிருபத்தி மூன்றைத் தொட்டதால் எதிராளியை வெல்வாய், மனக்கவலை தீரும், வெளியூரிலிருந்து லாபங்

[illegible] 101961

கிடைக்கும், குலதேவதைக்குப் பூசைபோடவும். இதற்கு அடையாளம் உன் இடது கண்மேல் மச்சங் காணவும்.

324-வது

பகைவனுந் துலைந்துவிட்டான் பலித்திடும் லாபமேலாய்
வகையுடன் கெலிப்பாய்சண்டை வந்ததோரெண்ணஞ்சாயுந்
தகைமையாய்தர்மம்பண்ணு தனித்திடபகையும்வேண்டாம்
யுகமதைக் கடந்துமுன்னோர் வுரைத்தசொல் நம்பிப்பாரே.

(வ-ம்) நீ முந்நூற்றிருபத்திநான்கைத் தொட்டதால் உன் பகையாளி துலைந்துவிட்டான், நினைத்தகாரியம் முடியும். சண்டை கெலிப்பாய், தர்மம்பண்ணு. ஒருவரையும் பகைக்கவேண்டாம் முன்னோர் எழுதின நூலை நம்பு.

331-வது

நாடியே தொட்டலக்கம் நம்பின பெண்ணஞ்சாயும்
கூடியே லாபங்காணும் குடும்பமும் விர்த்தியாகும்
தேடியே மனையாள்செய்யுந் தர்மமு முனக்கேலாபம்
வாடிட வேண்டாமுன்னோர் வழுத்திய நூலைநம்பே.

(வ-ம்) நீ தொட்டலக்கம் முந்நூற்று முப்பத்தொன்றாகையால் நினைத்தகாரியம் ஜெயமாகும், லாபங்கிடைக்கும், குடும்ப விர்த்தியாகும், தருமவானா யிருப்பாய், தைரியம் விடவேண்டாம், உன் பெண்சாதி செய்கிற தருமம் உனக்குச் சித்தியாகும் சுகம் உத்தமம்.

332-வது

எண்ணமு முடியாதின்ன மெத்தொழிலில் பலித்திடாது
நண்ணியே யிரண்டாண்டாக நவிலொணா கஷ்டப்பட்டாய்
உன்னிட நேசன்தானும் வுனக்கெதிர் வைரியானான்
மன்னனே வுண்மைசொன்னேன் மனமது கலங்கிடாதே.

(வ-ம்) நீ முந்நூற்று முப்பத்திரண்டைத் தொட்டதால் நினைத்த காரியம் முடியாது, எந்தவேலை செய்தாலும் நஷ்டம் உன் சிநேகிதனே உனக்கு வைரியாயிருக்கிறான். தைரியம் விடாதே மத்திபம், இரண்டு வருஷமாக மிகவும் கஷ்டப்பட்டாய்.

333-வது

நினைத்ததோர் வேலைசாயும் நம்பிநீ தொட்டலக்கம்
கனத்ததோர் சிநேகக்கூடும் கடவுளின் கிருபையாலே
மனத்திடங் கொள்ளநீதான் மைந்தனே குலதேவதைக்கு
யினமுடன் பூசைசெய்ய யேந்துவாய் புத்திரலாபம்.

(வ-ம்) நீ தொட்டகுறியால் லாபங்கிடைக்கும், நினைத்த காரியம் முடியும், நல்ல சிநேகிதங்கூடும், புத்திர பாக்கியமுண்டு குலதேவதைக்குப் பூசைபோட உத்தமம்.

334-வது

பலபல வெண்ணம்வேண்டாம் பாலாநீதொட்டலக்கம்
கலகல வெனவேலாபங் கைதனில் வந்துகூடுஞ்
சிலபெரி யோர்களாலே சிநேகிதம் வந்துகூடும்
நலமதில் மனமதில்கொண்ட நாட்டமும் பலிக்கும்பாரே.

(வ-ம்) நீ முந்நூற்றி முப்பத்திநான்கைத் தொட்டதால் மனதில் நினைத்தகாரியம் முடியும், கைவிட்டுப் போனபொருள் வரும், தனலாபங் கிடைக்கும், நல்ல சிநேகிதரால் உதவியாகும், பல யோசனை வேண்டாம்.

341-வது

உன்னிட மனதில்மெத்த வுருகுது விசனமொன்று
பின்னியே பித்தவாய்வு பிரட்டுது திரேகமெல்லாம்
சொன்னசொல் தவிர்ந்திடாதே சிவனை நீ தியானஞ்செய்தால்
நன்னியே புத்ரலாபம் நலந்தரும் பின்னாலென்றார்.

(வ-ம்) முந்நூற்றி நாற்பத்தொன்றைத் தொட்டதால் உன் மனதில் விசனமொன்றிருக்கிறது. இன்னும் உன்னுடம்பில் பித்தவாய்வு தங்கியிருக்கிறது. நீ சிவனை தியானஞ்செய், சகல முந் துலையும், புத்திரலாப முண்டாகும், இதுகள் பின்னால் சுகம் உத்தமம் பயப்படவேண்டாம்.

342-வது

நினைத்ததோ ரெண்ணஞ்சாயும் நம்பிடு மேற்குதிக்கில்
தனத்துடன் லாபங்காணுந் தளர்ந்தமுன் கஷ்டந்தீரும் [ன்
மனதிடங் கொள்வாய்நீயும் மர்மமும்வெளியாய்ச்சொன்னே
இனமுட னிரண்டுமாதம் யேகபின் சுகமுண்டாமே.

(வ-ம்) முந்நூற்றி நாற்பத்திரண்டைத்தொட்டதால் நினைத்த காரியஞ் சித்தியாகும், மேற்குதிசை லாபமுண்டு, நீ படுங் கஷ்டந் தீரும், இன்னும் இரண்டுமாதத்தில் சுகமாகும் உத்தமம் பயப்பட வேண்டாம்.

343-வது

கோபஞ் சண்டாளங்கொண்டு கூடியபொருளைத் தோற்றாய்
தாபமும் வேண்டாமப்பா தானது வந்துகூடுஞ்
சாபமாய் வெகுநாளாகச் சஞ்சலப் பட்டுவந்தாய்
லாபமும் பெறுவாயைந்து மாதமும் கழிந்துபாரே.

(வ-ம்) முன்னூற்றி நாற்பத்திமூன்றைத் தொட்டதால் மனக் கோபத்தினால் கைவிட்டுப்போன பொருள்வரும், நீ ரொம்பநாள துன்பப்பட்டுக்கொண்டு வந்தாய், இன்னும் ஐந்துநாள் போனால் சுகப்படுவாய். அது பரியந்தம் நீ நினைத்த வேலையைச் செய் ஜெயமாகும் பயப்படவேண்டாம்.

344-வது

எண்ணமும் பலிக்குமப்பா எத்தொழில் லாபங்காணும்
திண்ணமாய் விட்டநேசர் திரும்பியும் வந்துகூடும்
வண்ணமாய் ஸ்திரீயினாலே வாழ்வது மிகவுண்டாகும்
உண்மையா யிதனைநம்பு ஒருவர்மேற் பகைகொள்ளாதே

(வ-ம்) நீ முன்னூற்றி நாற்பத்தினான்கைத் தொட்டதால் உன் பீடை துலைந்துவிட்டது, எந்தவேலை செய்தாலும் லாபங் கிடைக்கும், ஒரு சிநேகிதனைப் பிரிந்து இருக்கிறாய், அவன் மறு படியுஞ் சிநேகமாவான் இன்னும் ஒரு ஸ்திரீயினால் சௌக்கிய முண்டாகும், உன் பகையாளி நாசமாவான். ஆனால் நீ ஒருவரை யும் நிஷ்டூரஞ் செய்துக்கொள்ளாதே உத்தமம்.

411-வது

கஷ்டமு மிகவேதோணுங் காண்பது நிராசையாகும்
துஷ்டரின் சிநேகத்தாலே ரோஷமாய்ப் பகையும்நேரும்
நஷ்டமா மிவைகளெல்லாம் நாடாமல் விலகிபோடும்
இஷ்டமாங் குலதேவதைக்கு வியல்புடன் பூசைசெய்வாய்.

(வ-ம்) நீ நானூற்றி பதினொன்றைத் தொட்டதால் நினைத்த காரியம் கைகூடாது, ஆசை நிராசையாகும், ஒரு சிநேகிதனால் அபாயம்வரும், அவனை நம்பவேண்டாம், நீ உன் குலதேவதைக் குப் பூசைசெய்ய நாளுக்கு நாள் கைகூடும் மத்திமம்.

412-வது

கன்னியி னாசையாலே கவலையும் படுகிறாய்நீ
இன்னமுஞ் சிலநாள்போனால் யிஷ்டத்தின்படியேகூடும்
தன்னிக ராகவேதான் தரித்திடும் புத்திரலாபம்
உன்னிட குலதேவதைக்கு வுகந்துநீ பூசைசெய்யே.

(வ-ம்) நீ தொட்டலக்கம் நானூற்றி பனிரண்டாகையால் நினைத்தகாரியம் கைகூடும். ஒரு ஸ்திரீ சம்பந்தத்தைப்பற்றி விசனப்படுகிறாய். அது இன்னும் கொஞ்ச தினத்திற்குள் கை கூடும். புத்திரலாபமாகும், குலதேவதைக்கு பூசைசெய்யவும்.

413-வது

நித்தமும் பணத்தினாசை நீடியுன் மனதில்வாட்டும்
உத்தம ஸ்திரீயினாலே வுதவியால் பொருளுஞ்சேரும்
பத்திய கிரகநன்மை பலத்ததோர் சிநேகங்கூடுஞ்
சித்தியாம் ஜாதகத்தில் சொல்மொழி தப்பிப்போச்சே.

(வ-ம்) நீ தொட்டலக்கத்தின் விபரங்கேள் உனக்கு பணத்தி னுடைய விசனமொன்றிருக்கிறது. ஒரு ஸ்திரீயால் பொருளுதவி யாகி அந்த விசனந்தீரும். ஒரு பெரிய மனுஷரா லுதவியாகும். வெளியூரில் வேலைகிடைக்கும். ஆனால் உன் ஜாதகம் ஒன்று தப்பி யிருக்கிறது உத்தமம்.

414-வது

பட்டவுடன் துன்பந்தன்னை பகர்ந்திட முடியாதப்பா
தொட்டதோர் கிரகம்போச்சு துணையது யினிமேலாச்சு
இட்டமாய் மனதிற்கொண்ட எண்ணமும் ஒருமாதத்தில்
கெட்டியாய் பலிக்குமென்றே காண்டீபன் தம்பிசொன்னார்.

(வ-ம்) நீ மிகவும் வருத்தப்பட்டாய், அந்த வருத்தம் நீங்கி விட்டது, ஆனால் உன் மனதில் ஒரு எண்ணம் வைத்திருக்கிறாய், அது இன்னும் ஒருமாதத்தில் கைகூடும். குலதேவதைக்குப் பூசைசெய்யவும். இந்நூல் பஞ்சவர்களில் ஒருவராகிய சகாதேவர் சொன்னது உத்தமம்.

421-வது

பொருளது கைவிட்டேகி புலம்பிநீ வாடுகின்றாய்
அருளுடன் வந்துசேரும் அயலூரின் பலனைக்காட்டும்
மறுமொழி கவலைவேண்டா மைந்தனை பெற்றுவாழ்வாய்
குருமொழி யாகநம்பி குறிப்பைநீ யறிந்துகொள்ளே.

(வ-ம்) நீ தொட்டது என்னவென்றால் கைவிட்டுப்போன பொருளைப்பற்றி விசனப்படுகிறாய், அது கைகூடும், வெளியூரி லுதவியாகும், புத்திரலாபமாகும், விசனப்படவேண்டாம்.

422-வது

சென்றதோர் வருடமூன்றுஞ் சிறுமையால் மெய்யதாகும்
இன்றுடன் பீடையெல்லாம் ஒழிந்திடும் பயப்படாதே
நன்றென யெடுத்தவேலை நம்பிசெய் கவலைவேண்டாம்
வென்றுநீ வாழ்வாயப்பா வேணதோர் புத்திரரோடே.

(வ-ம்) நீ மூன்று வருஷமாய் மிகவும் வருத்தப்பட்டாய் அந்த வருத்தம் நீங்கிவிட்டது, எந்தவேலை செய்தாலும் பலிக்கும் விசாரித்துச்செய், பயப்படாதே, புத்திரலாபமுண்டு, குலதேவ தைக்குப் பூசைசெய்.

423-வது

குறைவது யில்லைசொன்னேன் கொண்டதோ ரெண்ணஞ்சாயும்
பெறுகுவா யதிகலாபம் பின்னொரு பயமும்வேண்டாம்
திறமுடனே யெத்தொழிலும் தீரமாய்ச் செய்வாயானால்
அறியவே பலிக்குஞ்சொன்னே னுயன்றன் னருளினாலே.

(வ-ம்) நீ நினைத்தகாரியம் முடியும், எத்தொழில் செய்தா லும் அதிக லாபங்காணும். விசாரித்துச்செய் பயப்படவேண் டாம் உத்தமம்,

424-வது

நம்பினயெண்ணமெல்லாம் நஷ்டத்திலொழிந்துபோச்சு
வெம்பியேவாடுகின்றாய் வீட்டிலுஞ்சுகமில்லாமல்
தெம்புடன்வாழப்போறாய் தைரியம்விடவேவேண்டாம்
உம்பன்றன்சாட்சியாக வுரைத்தசொல்நம்பிப்பாரே.

(வ-ம்) நீ தொட்டலக்கம் என்னவென்றால் மிகவும் வருத்தப் படுகிறாய். நினைத்த வேலையெல்லாம் நஷ்டமாய்விட்டது, வீட்டி லுஞ் சுகமில்லை. ஆனால் இனி சுகப்படுவாய் பயப்படவேண்டாம்.

431-வது

பாலனே பயப்படாதே பலித்திடும் நினைத்தவேலை
மெலென அண்ணன்தம்பி மகிழுடன் கூடுவார்கள்
சாலமும் நல்லதாச்சு கிரகமும் விட்டுப்போச்சு
சீலமாய் வாழ்வாயப்பா சந்தேக மில்லைதானே.

(வ-ம்) நீ நினைத்தகாரியஞ் சித்தியாகும் மனக்கவலை தீரும், அண்ணன் தம்பி வந்து கூடுவார்கள், உன் கிரகங்கள் நல்லதா யிருக்கின்றது, சந்தேகப்படவேண்டாம் உத்தமம்.

432-வது

மனமதில் நினைத்தவேலை மகிழுடன் வந்துகூடும்
கனமுமே வெளியூர்போக கருத்தினிலெண்ணங்கொண்டாய்
துணையென நம்பவேண்டாம் துணிந்துசேப் மனதின்போல
குணமுடன் மனம்போலண்ணன் கூடுவதில்லை யென்றாரே.

(வ-ம்) நீ மனதில் நினைத்தவேலை முடியும், நீ வெளியூர்போக நினைத்திருக்கிறாய், தடையில்லாமற் போகலாம், ஒருவரையும் நம்பவேண்டாம், அண்ணன் தம்பியுடன் பகையாயிருக்கிறாய் உத்தமம்.

433-வது

சங்கையு மில்லைசொன்னேன் சகலமுங் கைதான்கூடும்
மங்களமாக வாழ்வாய் மற்றொரு நேசராலே
பொங்கமாய் வீட்டுவேலை புகழ்ந்துமே மிகவுண்டாகும்
தங்கென நாளுக்குநாள் தழைத்திடும் புத்திரலாபம்.

(வ-ம்) வியாபாரம் விர்த்தியாகும், தனலாபங் கிடைக்கும், நல்ல சிநேகிதரால் வீட்டுக்காரியம் நன்மையாகும், புத்திரலாபங் கிடைக்கும், பயப்படாதே நாளுக்குநாள் சகாயமாகும் நம்பு உத்தமம்.

434-வது

கைபது கூடும்வேளை கஷ்டமும் விலகிப்போச்சு
தப்பனே வுனதுவீட்டு துயாமு மினிமேலில்லை
ஐவரி லிளையதம்பி அருள்சகா தேவர்வாக்கை
மெய்யென நம்பிமாயன் மலரடி துதிசெய்வாயே.

(வ-ம்) நீ நினைத்த காரியம் முடியும் வீட்டுக்கஷ்டமும் தீரும். பஞ்சவர்களில் ஐவரான சகாதேவர் பேச்சை மெய்யாக நம்பி கடவுளை பூசைசெய்யவும் உத்தமம்.

441-வது

கிரகமும் பொல்லாதப்பா கவலையு மிகவுண்டாகும்
பிரியமாய்த் தேடினவுன் பொருளது விலகிப்போச்சு

வருமென வெண்ணம்வேண்டாம் வந்திடும் மாதமேழில்
உரையது தவறினுக்கால் ஒங்கியீ ராண்டிலாமே.

(வ-ம்) நீ நினைத்த காரியம் மத்திபம் உன்கிரகம் கெட்டதா யிருக்கின்றது, உன் கைவிட்டு ஒருபொருள் போயிற்று. அந்தப் பொருள் வந்தால் ஏழுமாதத்திலாவது இரண்டு வருஷத்திலாவது வரவேணும் தைரியம் விடாதே.

442-வது

நலியென்னும் பிணிதான்மெய்யில் நாளுமே வுன்னைவாட்டும்
சலியாமல்நீ செய்ததர்மம் சகலமும் நன்மையாகும்
குலமெனுந் தேவதைக்குக் கூட்டியே கிரகபூசை
நலமுடன் செய்வையாகில் நாளுமே சுகமென்றாரே.

(வ-ம்) எப்போதும் உன் உடம்பு நலிந்திருக்கின்றது, இருந்த போதிலும் உன்னுடைய தர்மம் காப்பாற்றுகின்றது, இன்னும் நீ குலதேவதைக்கும் நவக்கிரகத்திற்கும் பூசை செய்வாயாகில் சகலமும் நன்மையாகும் உத்தமம்.

443-வது

முன்னுதாய் பலிக்கும்லாபம் மூதல்வன்றன் கிருபையாலே
பின்னொரு பொருளுநஷ்டம் பிரிந்திடு மஞ்சிடாதே
இன்னொரு மாதமட்டும் யிருக்குது கெட்டகாலம்
பின்னிட சுகமேயென்று பேசிய மொழியைநம்பே.

(வ-ம்) நீ நினைத்தகாரியம் பலிக்கும் பலித்தபோதிலும் ஒரு பொருள் நஷ்டமாகும், கிரகங்கள் கெட்டதாயிருக்கிறது, இன்னும் ஒருமாதங் கழிந்தால் சுகப்படும் தைரியம் விடவேண்டாம்.

444-வது

ஜெயமுடனே யெத்தொழிலும் பலிக்குமப்பா
சிந்தையிலே பயமென்ற கவலைநீக்கு
நயம்பெறுவாய் பந்துவுடன் கூடிவாழு
நாட்டமாய் முன்செய்த தொழிலைநம்பு
தயவுடனே ஆராய்ந்து கிருபையாலே
தான்வாழ்வா யென்றுசகா தேவர்சொன்னார்
ஜெயமாக யிந்நூலை நம்பினோர்கள்
சிரஞ்சீவி யாயுலகில் வாழ்வார்தானே.

(வ-ம்) நீ நானூற்றி நாற்பத்திநான்கைத் தொட்டதால் நினைத்தகாரியம் சித்தியாகும், உன் மனதில் பயமிருக்கிறது, அந்தப் பயத்தை விட்டுவிடவும், உன் பந்துக்களுடன் கூடிவாழவும் நலம். நீ முன்செய்த தொழிலைவிட்டு யிருக்கிறாய், அதைச் செய்யவும்.

இராமதேவர் ஆஞ்சநேயருக்கு உபதேசித்த

உத்தம மத்திப சாஸ்திரம்

28	33	37	34	18	17
22	45	53	42	21	19
32	81	84	61	72	56
46	14	43	80	29	58
54	64	52	36	13	60
27	12	96	41	11	39

இந்த உத்தம மத்திப சாஸ்திரம் பார்க்கப்பட்டவர்கள் சிறு குழந்தையின் கையில் ஓர் புஷ்பத்தைக் கொடுத்து புஷ்பத்தால் மேலேயிருக்கிற சக்கரத்தில் நெம்பரில் ஏதாகிலும் ஒன்றைத் தொடச்சொல்லி அந்த நெம்பர் பிரகாரம் எடுத்து வாசித்துப் பார்த்தால் நன்மை தீமை எளிதில் அறிந்துக்கொள்ளலாம். இந்த சாஸ்திரம் கையாண்டுக்கொண்டு வந்திருந்ததை யாவரும் அச்சிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டபடியால் இப்போது நூதனமாய்ச் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது.

11 ராமர் சுக்ரீவனுக்கு பட்டங்கட்டுதல் இது உத்தமம்.

12 இராவணன் சீதையை சிறை யெடுத்த விடம், நினைத்த காரியம் தாமதத்தில் முடியும்.

13 கலைக்கோட்டு மகாமுனிவர் புத்திர காமேஷ்டி யாகஞ் செய்தது இது உத்தமம்.

14 இராவணன் சடாயுபட்சியை மடக்கிப் போர்செய்து தோல்வி யடைந்தவிடம் ஆகாது மத்திபம்

17 கைகேசியின் சொற்படி ஸ்ரீராமர் சீதா லட்சுமண சமேதராய் வனமேகுதல் இது மத்திபம்.

18 அனுமார் அசோகவன மழித்தவிடம் இது மத்திபம்.

19 ராவணனை சீதை நிந்தித்தல் இது ஆகாது மத்திபம்

21 கிருஷ்ணன் பவளக்கொடியாள் பாளையத்தைக் கதண்டு கொட்டி மாளச்செய்தது இது மத்திபம்.

22 அனுமார் எழுபதுவெள்ளம் சேனையை ஓடி மடக்கி மிஞ்சாதேயென்று நிறுத்தினது இது நன்று.

27 சீதாதேவி சிறையிலிருந்தவிடம் இது ஆகாது நினைத்த காரியம் பலியாது மத்திபம்.

28 ஸ்ரீராமர் ஆஞ்சநேயருக்கு இரகசியம் உபதேசித்தவிடம் இது உத்தமம்.

29 ஆஞ்சநேயர் சஞ்சீவிமலையை கொண்டுவரப் போகுதல் நினைத்த காரியம் துன்பந்தரும் மத்திபம்.

32 இராமசுவாமி வனவாசம் போனவிடம் மனதில் நினைத்த காரியம் அனுகூலமாகாது மத்திபம்.

33 இராமசுவாமியும் இலட்சுமணரும் இரகசியம் பேசினவிடம் இது மகா உத்தமம்.

34 ஸ்ரீராமர் சீதாதேவியைப் பறிகொடுத்து மனம் வியாகூலமாய் நின்றவிடம் இது மத்திபம்.

36 அனுமார் அசோகவனத்திற் போய் சீதையைக்கண்டு மோதிரங் கொடுத்தது நல்லது உத்தமம்.

37 விபீஷணனுக்குப் பட்டங் கட்டினவிடம் இது மகா நல்லது நினைத்த காரியம் ஜெயமுண்டு உத்தமம்.

39 அனுமார் பரத மகாராஜனுக்கு ராமர் வருதலை யுரைத்தல் நினைத்த காரியம் தாமிஷத்தில் முடியும்.

41 ஸ்ரீராமர் சீதாதேவியைக் காணாது மனம் நினைத்து நின்றவிடம் நினைத்த காரியம் துயருண்டு எதிரியால் பகையும் பொல்லாங்கும் வரும் ஜெயமில்லை.

42 இலட்சுமணப்பெருமாள் இந்திரஜித்தை ஜெயம் பண்ணினவிடம் இது மகா உத்தமம்.

43 ஸ்ரீராமர் மிதிலைக்கு விஸ்வாமித்திரரோடு போகும்போது கற்சிலையைப் பெண்ணாக்கினவிடம் இது மிகவும் நல்லது நினைத்த காரியம் சித்தி உத்தமம்.

45 இராமசுவாமிக்கும் சுக்ரீவனுக்கும் வாக்குவாத மானவிடம் இது ஆகாது மத்திபம்.

46 அனுமார் லங்காபுரியைத் தீயிட்டவிடம் மத்திபம்.

52 ஸ்ரீராமருக்கும் பரசுராமருக்கும் தர்க்கம் நடந்தயிடம் இது ஆகாது மத்திபம்.

53 இராவணன் சீதையை எடுத்துக்கொண்டு போனவிடம் இது மத்திபம்.

54 வால்மீகி வனத்தில் இராமசுவாமி வனபோஜனம் செய்தவிடம் இது மகா நல்லது நினைத்த காரியம் சீக்கிரம் கைகூடும் உத்தமம்.

56 இந்திரஜித்துவின் பிர்மாஸ்திரத்தால் லட்சுமணர் யாவரும் மூர்ச்சையடைதல் இது ஆகாது மத்திபம்.

58 ராவணனுக்கும் சுக்ரீவனுக்கும் மல்யுத்தம் நினைத்த காரியம் தாமிஷத்தில் அனுகூலம்.

60 ஸ்ரீராமருக்குப் பட்டாபிஷேகமாகுதல் இது நல்லது.

61 ஸ்ரீராமர் சீதாதேவியை சிறைமீட்டியவிடம் இது தாமதத்தில் காரியம் அனுகூலமாகும்.

64 இராமசுவாமி தாடகையை ஜெயித்தயிடம் இதனால் அநேக காரியம் அனுகூலமாகும் உத்தமம்.

72 ஸ்ரீராமரால் கும்பகர்ணன் மாண்டவிடம் நன்றல்லமத்திபம்

80 ஸ்ரீராமருக்கும் சீதைக்கும் கலியாணமானவிடம் இது மகா நல்லது உத்தமம்.

81 அங்கதன் தூதுபோனவிடம் வெகுலாபம் உத்தமம்.

84 இராவணன் சீதாதேவியைச் சிறையில்வைத்தயிடம் நினைத்த காரியம் ஜெயமில்லை பயமுண்டு பகையாளிகளாலே கெடுதியுண்டு இது ஆகாது மத்திபம்.

96 இராமசுவாமி தபசு பண்ணினவிடம் இக்காரியம் ஆலசியத்தில் அனுகூலமாகும்.

தொடுகுறி சாஸ்திரம் முற்றிற்று.

ஆசிரியர்:—பஞ்சபாண்டவர்களில் ஒருவராகிய காலஞ்சென்ற சகாதேவர்—ஹஸ்தினாபுரம்.

வெளியிட்டவர், அச்சிட்டவர்:—
அ. குழந்தைவேல் முதலியார், தெய்வமகள் விலாச அச்சகம்
24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை-1, (1956)

ஆவணக் காப்பக நூலகம் சென்னை 600 008
18194

	ரூ.	அ.	ப.
வைத்திய அரிச்சுவடி 4-பாகங்கள்	1	0	0
மாட்டுவாகடம் தனி பயிண்டு	2	0	0
அசுவசாஸ்திரம் தனி பயிண்டு	2	0	0
மாட்டுவாகடம் அசுவசாஸ்திரம் 2-ம் சேர்ந்த கலிகோ கட்டடம்	5	0	0
பச்சிலை வர்க்க பசுமூலிகை அகராதி 112-பக்கங்கள் அடங்கியது	1	0	0
திருமுருகாற்றுப்படை மூலமும் உரை	1	8	0
ஆண் பெண் ரேகை சாஸ்திரம் மூலமும் உரையும்	2	0	0
கந்தர் அநுபூதி மூலமும் உரையும்	1	8	0
களவெண்பா மூலம்	1	0	0
சிவபராக்கிரமம்	4	0	0
சஷ்டி கவசம் மூலமும் உரையும்	1	0	0
கந்தர் கலிவெண்பா மூலமும் உரையும்	1	0	0
கந்தர் அந்தாதி மூலமும் உரையும்	1	0	0
நீதிநெறி விளக்கம் மூலமும் உரையும்	1	8	0
ஆறெழுத்தந்தாதிமூலமும் விருத்தியுரையும்	1	8	0
நிஷ்டாநுபூதி மூலமும் உரையும்	1	8	0
நானாசீவவாதக்கட்டளை விருத்தியுரை	1	8	0
32-கட்டளைகள் சேர்ந்த கட்டளைத்திரட்டு	3	0	0
சோதிட பாலபாடம் 1-ம் பாகம்	1	8	0
பிரபுலிங்கலீலை	4	0	0
மனுதருமசாஸ்திரம்	5	0	0

ஸ்ரீ பகவத்கீதை வசனம் கிளேஸ் — விலை ரூபா 5

ஸகல லோகரக்ஷகனான திருமால் தானே கிருஷ்ணனாக திருவவதாரஞ் செய்த காலத்தில் "தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்று சொல்லுகிறபடி அருச்சுனனை வியாஜமாகக்கொண்டு இம்மாநிலத்து மாந்தர்கள் அனைவரும் மகிழ்ந்து உய்யுமாறு வேதாந்தத்தின் ஸாரமாகிய இக் கீதாசாத்திரத்தை பரமகிருபையால் உபதேசித்திருக்கிறார்.

இக் கீதாசாத்திரத்திற்கு வடமொழியில் அநேகம் இருக்கிறது என்று யாவரும் அறிந்த விஷயமே. வடமொழியில் இருப்பதைச் சுத்தமாகத் தமிழ் வசனநடையில் ஸ்ரீ சங்கர பாஷியத்தைத் தழுவி சென்னை கிறித்தவ கலாசாலை மாஜி தமிழ்ப் பண்டிதர் T. C. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்களால் எழுதப்பட்டு அழகிய இரண்டு படங்களும் சேர்த்து கடைசியில் தத்வ நாமங்களும் சேர்த்துள்ளன. ஆகையால் ஒவ்வொருவரும் தெய்வமகள் விலாச அச்சகத்தில் அச்சிட்டதா என்று பார்த்து வாங்கக் கோருகிறேன். சொற்ப பிரதிகளே இருப்பதால் வேண்டுவோர் முந்திக்கொள்ளுங்கள். ரப்பு விலை ரூபா 3.

விஞ்ஞான தத்துவ ஹஸ்தரேகை சாஸ்திரம்

யோக சித்தாந்த மகான் சுவாமி வடிவேல் எழுதியது விலை ரூ. 1 0 0

இந்நூல் பெரும்பாலும் நமது கைகளிலுள்ள ரேகைகளையே அநுபவ சித்தாந்தமாக விளக்கிக்காட்டிப் பலாபலன் சொல்லுகிறது. நமது ஆயுள் அதிர்ஷ்டம் ஐஸ்வரியம் அறிவு ஞானம் தாரம் சந்தானமும், வாழ்க்கையின் சுக துக்காதி எந்த எந்த வயதில் நடப்பதென்பதையும், கைகளின் விரல்களிலுள்ள அங்குலாஸ்திகளில் காணப்படும் நானாவித நன்மை தீமைகளை அநேக படங்களின்மூலம் விளக்கிக்காட்டி பலாபலன்கள் எழுதி யிருக்கிறது. இதனால் முக்காலத்தையும் சுலபமாக அறியலாம்.

தெய்வமகள்பதிப்பு

வெளியாகிவிட்டது! வெளியாகிவிட்டது!

பிரபல மாந்திரீகர்களுக்கு ஓர் அறிய பொக்கிஷம்

கருவூரார் மாந்திரீக

அட்டமா சித்து

கடல் சூழ்ந்த நெடிய உலகமெங்கணும் புகழ்பெற்றோங்கிப் பெருமை வாய்ந்த கும்பமுனி, நந்திமுனி, போகமுனி, ஆகிமுனி, மச்முனி, புலிப்பாணி, கருவூரார், புஜண்டரிஷி, ரோமரிஷி, கொங்கணர், தேரையர், புண்ணாக்கீசா, சண்டிகேசா, காலங்கி நாதர், இடைக்காடர், சிவவாக்கியர், திருமூலர், பூனைக்கண்ணர் முதலிய பதினெண் சித்தர்களில் கருவூரார் என்னுஞ் சித்து மகா புருஷர் மானிடர்களுய்யும்பொருட்டுக் கிருபாநோக்கம் பாலித்து திருவாய் மலர்ந்தருளிய 'மாந்திரீக அட்டமாசித்து' என்னும் நூலை காசிப்பரதேசியா ரவர்களால் குருமுகூர்த்தமாய்ப் பெற்றுக் கொண்டு இதிலுள்ள மர்மங்களைச் சற்றேறக்குறைய அறிந்து இச் செய்யுள்களையும் இச் செய்யுள்களில் தோயும் வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், ஆக்ருஷ்ணம், வித்துவேஷணம், பேதனம், மாரண முதலிய மூலமந்திரங்களையும், அந்தந்த சித்துகளுக்குரிய தகட்டினளவையும், ஆசனவகைகளையும், புட்ப வகைகளையும், உரு வேற்ற மணிகளையும், முத்திரை பிடிக்கும் நேர்மைகளையும், பூஜா நைவேத்தியங்களையும் செய்யுந் திசைகளையும், உருவேற்ற மிலக்கங் களையும் வசனகாவியமாக எழுதியும், அந்தந்த சித்துகளுக்குத் தக்க யந்திரங்களை மாறியும், தனித்தனி விநாயகா பூஜை சுப்பிர மணியர் பூஜை, வாலை பூஜை, வயிரவர் பூஜை, தூமாவாராகி பூஜை, ஆஞ்சநேயர் பூஜை, மாடன் பூஜை முதலியனவுஞ் சேர்த்து அச்சிட்டிருப்பததால், இதில் சொற்பிழை, எழுத்துப் பிழை முதலியவைகளை நீக்கி விஷயங்களை மாத்திரம் நன்கு கவனிப்பீர்களெனக் கோருகின்றனன். இதன் விலை அணா 12

முருகன் புகழ்மணி மாலை இதன் விலை அணா

இதில் முருகப்பிரானுடைய விஷயங்களை அறிந்து பாராயண செய்வோர்க்கு, திருமுருகாற்றுப்படை, கந்தர் அலங்காரம், கந்தர் அ பூதி, கந்தர் சஷ்டி கவசம், கந்தர் கலிவெண்பா முதலிய அநேக நூல் சேர்த்து அழகிய 2-கலரில் டைட்டில்பேஜ் அச்சிட்டிருக்கிறது.

சோதிட பிரஞ்ஞான தீபிகை இதன் விலை ரூபா

இந்நூலானது லக்னமுதல் 12-பாவங்களுமுள்ள பலன்களைச் சோ ஷம் அறிந்தவர்க்கும் அறியாதவர்க்கும் எளிதில் விளக்கிக் காட் கூடிய ஒரு வசன நூலாக இருக்கிறது. இந்நூல் ஒவ்வொரு மனிதரிட திலு மிருந்தால் அவரவர் வாழ்வு நாட்களில் வரும் நன்மை தீமைகளை சுலபமாய்ச் சோதிடர்கள் உதவியில்லாமலே அறிந்து கொள்ளலாம்.

கிடைக்குமிடம்:—

சரஸ்வதி புத்தகசாலை,

175. செட்டியார் தெரு, கொழும்பு.